O.S No.147/2016

திரு.பாலசுப்பிரமணியம் (P.W–1)

15.09.2021

குறுக்கு விசாரணை :

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை,

நீங்களும், உங்கள் மனைவியும் ஒன்றாக சேர்ந்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்து எந்த காலையில் எந்த கிராமத்தில அமைந்துள்ளது என்றால் 59/2 ஐ என்ற காலையில் கருவலூர் கிராமத்தில் அமைந்துள்ளது. உங்கள் தாத்தா பெயர் என்னவென்றால் முத்துசாமிகவுண்டர். முத்துசாமிகவுண்டரும் அவரது சகோதரரும் 1939ம் வருடம் வா.சா.ஆ.1 பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். வா.சா..ஆ1 ஆவணப்படி முத்துசாமிக்கு பிரிந்த சொத்துக்களில் பழைய காலை எண்.59/2ல் கிழமேல் நீளியாய் 17 செண்டுகள் என்றுதான் குறிப்பிடப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிழமேல் நீளியாக உள்ள பூமியானது தான் தற்போது 59/2H என்று உட்பிரிவாகியுள்ளது என்றால் சரிதான். 59/2 I ம் நம்பர் காலையானது வருவாய் துறை ஆவணங்களில் பாதை என்றுதான் குறிபிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த காலையில் உள்ள இடம் எனது பூமி ஆகும். 59/2I க்கு தென்புரம் 69ம் நம்பர் காலையில் சாலை உள்ளது என்றால் சரிதான். புதிய க.ச.எண் படி 59/2G பழனியம்மாளிடம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. க.ச.எண்.59/2F பூமி யாரிடம் உள்ளது என்றால் பொன்னம்மாளிடம் உள்ளது. 59/2Fக்கு வடபுரம் 59/2E என்ற காலை யாரிடம் உள்ளது என்றால் என்னிடம்தான் உள்ளது.உங்கள் பூமிக்கு கிழபுரம் உள்ள 59/2D பூமி யாரிடம் உள்ளது என்றால் பழனியம்மாளிடம் தான் உள்ளது. 59/2E, 59/2F. 59/2G,59/2H ஆகிய காலைகளுக்கு மேல்புரமாக காலை எண் 68ல் நத்தம் பூமி உள்ளது என்றால் சரிதான். 59/2E மேல்புரமாக

67/2 என்ற காலை அமைந்துள்ளது என்றால் சரிதான். 59/2E க்கு வடபுரமாக 59/2A ல் கிணறும் 59/2B காலை உள்ளது என்றால் சரிதான். 59/2E, 59/2F. 59/2G,59/2H, 59/2I ஆகிய காலைகளுக்கு கிழபுரமாக தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சாலை உள்ளது என்றால் சரிதான். அந்த சாலையைதான் காலை எண்.59/2I என்று உட்பிரிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பழனியம்மாள் பூமிக்கும் தெற்கிலிருந்து வடக்கு செல்லும் இதே தடம் உள்ளது என்றால் சரிதான். 59/2H காலையில் உள்ள பட்டாவில் உங்கள் பெயர்கள் எல்லாம் விடுப்பட்டு விட்டது என்று மனு அளித்தீர்கள் என்றால் சரிதான். அதில் தாசில்தார் 59/2H காலையில் உங்கள் பெயர்களை இணைத்து பட்டா வழங்கியுள்ளார் என்றால் சரிதான். 59/2H காலையில் உங்கள் பெயர் உள்ளது மாதிரியே நாகப்பன் அவர்களின் வாரிசுகளின் பெயரும் உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டா மாறுதல் எப்போது நடைபெற்றது என்றால் எப்போதுநடந்து என்று எனக்கு சரியாக நினைவில் இல்லை. உங்கள் தாத்தா முத்துசாமிகவுண்டருக்கு 1939 ம் வருட பாகப்பிரிவினை பத்திரப்படி என்ன பாக பாத்தியப்பட்டதோ அந்த பாகம் தான் உங்களுக்கும் உரித்தானது என்றால் சரிதான். சண்முகம் சுந்தரம், கோதண்டபாணி, மற்றும் கௌசல்யாவின் தந்தை பெயர் என்னவென்றால் நாகப்பன். நாகப்பனின் மனைவி பெயர் என்னவென்றால் துளசியம்மாள். நாகப்பனுக்கு நீங்கள்தான் 7.03.1986 ம் வருடம் பூமியை கிரையம் செய்து கொடுத்தீர்கள் என்றால் சரிதான். அப்போது நீங்கள் என்ன கிரையம் செய்து கொடுத்தீர்கள் என்றால் பூமியை கிரையம் செய்து கொடுக்கவில்லை ஆனால் கிராம நத்தம் வீடு இல்லாத காலி இடத்தைதான் கிரையம் செய்து கொடுத்தேன். நீங்கள் கிரையம் செய்து கொடுத்த இடத்தின் அளவு எவ்வளவு என்றால் 7 செண்டு ஆகும். நீங்கள் கிரையம் கொடுத்த 7 செண்டு பூமியின் காலை எண் என்ன என்றால் எழுதி கொடுத்த போது எனக்கு அநத் காலை எண் குறிப்பிட்டது எனக்கு நினைவில் இல்லை. அந்த கிரையம் செய்த போது எல்லைகள் எல்லாம் குறிப்பிட்டுதான் கிரையம் செய்து கொடுத்தீர்களா என்றால் எனக்கு அது குறித்த விபரம் தெரியாது. நாகப்பன்

வாங்கிய கிரைய பத்திரத்திம் செல்லாது என்றும் உங்களை ஏமாற்றி கிரையம் பெற்றார் என்று இது வரை ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. நீங்கள் கிரையம் கொடுத்த இடத்தில்தான் அவர்கள் வீடு கட்டிஅனுபவித்து வருகிறார்கள் என்றால் கிராம நத்தத்தில் நான் எழுதி கொடுத்தஇடத்தில்தான் அனுபவித்து வருகிறார்கள். நான் கிரையம் கொடுத்து அவர்கள் அனுபவித்து வரும் இடம் 59/2I என்ற காலைக்கு வடபுரமாகதான் உள்ளது என்றால் சரிதான். 1986 ம் வருட கிரைய பத்திரத்தில் சாட்சியாக உள்ள ராமசாமி என்பவர் யார் என்றால் எனக்கு பெரியப்பா ஆவார், அவர் என்னவாக இருந்தார் என்றால் அவிநாசி யூனியனில் சேர்மேனாக இருந்தார். ராமசாமிக்கும் உங்களும் எந்தவிதமான சண்டை சச்சரவுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d....M.Afzal Fathima
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.